2013 ஏப்ரல் 2]

வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்ற ஆவலிலே இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தனித் தொகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அனுதினமும் வணங்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதத்தைப் பணிந்து வணங்குகின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. ‘காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடுவது குறித்து மகாத்மா காந்தி அவர்களது கருத்து—முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஓர் அறிக்கையினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் உள்ளாட்சித்*

துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசுகின்றபோது சில கருத்துகளைத் தெரிவித்தார். அப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் குறுக்கிட்டு, "இந்திய நாடு விடுதலை அடைந்த பிறகு, மகாத்மா காந்தி அவர்கள், 'காங்கிரஸ் கட்சியையே கலைத்துவிட வேண்டும்' என்று கூறினார்" என்று சொன்னார். அப்போது, மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய செல்லத் தம்பி, திரு. பிரின்ஸ் அவர்கள் குறுக்கிட்டு, 'மகாத்மா காந்தி அப்படிச் சொல்லவே இல்லை' என்றார். (மேசையைத் தட்டும் ஒலி) கூடவே, திருமதி விஜயதரணி அவர்களும், 'ஆமாம், மகாத்மா காந்தி அப்படிச் சொல்லவே இல்லை' என்றார். வேறு சில மாண்புமிகு உறுப்பினர்கள் அப்போது குறுக்கிட்டு, 'இது வரலாறு, வரலாற்று உண்மை' என்றார்கள். அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பிரின்ஸ் அவர்களும், திருமதி விஜயதரணி அவர்களும், 'மகாத்மா காந்தி இப்படிச் சொன்னதற்கு எந்த ஆதாரமும் இல்லை' என்றார்கள். ஆதாரம் இருக்கிறது; அந்த ஆதாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு பேச வேண்டும் என்பதற்காகத்தான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நேற்று நான் பேசாமல் இருந்தேன்.

முற்பகல் 11–15

மகாத்மா காந்தி அவர்கள் 30–1–1948 அன்று கொலை செய்யப்பட்டார்கள். மகாத்மா காந்தி அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு நாள் முன்பு, அதாவது, 29–1–1948 அன்று காங்கிரஸ் கட்சிக்கான ஒரு Draft Constitution–ஐ எழுதி அனுப்பினார். அதாவது, காங்கிரஸ் கட்சிக்கான ஒரு வரைவு சட்ட திட்ட விதிகளை எழுதி அவர் அனுப்பினார். இது மகாத்மா காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பிறகு, 7–2–1948 அன்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் ஆச்சார்யா ஜுகல் கிஷோர் என்பவரால் வெளியிடப்பட்டது. "The Collected Works of Mahatma Gandhi-Volume 90" என்ற புத்தகம் இதோ இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) "The Collected Works of Mahatma Gandhi - Volume 90" என்ற நூல் மத்திய அரசின் Ministry of Information and Broadcasting–யுடைய Publication Division–ஆல் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்

வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகத்திற்கு முன்னாள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அந்நாள் பாரதப் பிரதமருமான அன்னை இந்திரா காந்தி அவர்களே முன்னுரை-Foreword -எழுதி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மகாத்மா காந்தி அவர்கள் எழுதிய காங்கிரஸ் கட்சிக்கான சட்ட திட்ட விதிகளில் Draft Constitution–ல் என்ன சொல்லி இருக்கிறார்? ஆங்கிலத்தில்தான் எழுதி இருக்கிறார். அதாவது, அதற்குத் தலைப்பு—Draft Constitution of Congress.

"Though split into two, India having attained political Independence through means devised by the Indian National Congress, the Congress in its present shape and form that is, as a propaganda vehicle and Parliamentary machine, has outlived its use." அப்படியானால், அதற்கு என்ன அர்த்தம்? காங்கிரஸ் காலாவதி ஆகிவிட்டது என்று மகாத்மா காந்தி அவர்களே எழுதி இருக்கிறார். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மேலும், மகாத்மா காந்தி அவர்கள் எழுதி இருக்கிறார்;

"India has still to attain social, moral and economic Independence in terms of its 700 thousand of villages as distinguished from its cities and towns. The struggle for ascendancy of civil over military power is bound to take place in India's progress towards its democratic goal. It must be kept out of unhealthy competition with political parties and communal bodies. For these and other similar reasons, the AICC resolves to disband the existing Congress Organisation..." (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அதாவது, மகாத்மா காந்தி அவர்களே தன் கைப்பட எழுதிய காங்கிரஸ் கட்சிக்கான வரைவு சட்ட திட்ட விதிகளில், அவர் பல காரணங்களுக்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, இந்த காங்கிரஸ் அமைப்பையே கலைத்துவிடுவது என்று முடிவு செய்கிறது என்று எழுதி இருக்கிறார். ஆகவே, காங்கிரஸ் கட்சியிலே உள்ள பலருக்கு காங்கிரஸ் பற்றிய வரலாறே தெரியாமல் அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இதுதான் தக்க ஆதாரம் என்பதைக் கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)